

# SIVAPURANAM
## MISSION

www.Sivapuranam.in

திருச்சிற்றம்பலம்

# 5. திருச்சதகம்

(திருப்பெருந்துறையில் அருளியது)

பத்தி வைராக்கிய விசித்திரம்

(1) மெய்யுணர்தல்

(கட்டளைக் கலித்துறை)



# திருச்சிற்றம்பலம்



மெய்தான் அரும்பி விதிர்விதிர்த்து
உன்விரையார் கழற்கு என்
கைதான் தலைவைத்துக் கண்ணீர்
ததும்பி வெதும்பிஉள்ளம்
பொய்தான் தவிர்ந்துஉன்னைப் போற்றி
சயசய போற்றிஎன்னும்
கைதான் நெகிழவிடேன் உடையாய் 1
என்னைக் கண்டுகொள்ளே.





கொள்ளேன் புரந்தரன் மால்அயன்

வாழ்வு குடிகெடினும்

நள்ளேன் நினது அடியாரொடு

அல்லால் நரகம் புகினும்

எள்ளேன் திருவருளாலே

இருக்கப் பெறின்இறைவா

உள்ளேன் பிறதெய்வம் உன்னை அல்லாது 2

எங்கள் உத்தமனே.





உத்தமன் அத்தன் உடையான்

அடியே நினைந்துஉருகி

மத்த மனத்தொடு மால் இவன்

என்ன மனநினைவில்

ஒத்தன ஒத்தன சொல்லிட

ஊர்ஊர் திரிந்துஎவரும்

தத்தம் மனத்தன பேச 3

எஞ்ஞான்றுகொல் சாவதுவே





சாவ முன்நாள்தக்கன் வேள்வித்

தகர்தின்று நஞ்சம்அஞ்சிகி

ஆவ எந்தாய்என்று அவிதா

இடும் நம்மவர் அவரே

மூவர் என்றே எம்பிரானொடும் எண்ணி

விண்ஆண்டு மண்மேல்

தேவர் என்றே இறுமாந்து என்ன 4

பாவம் திரிதவரே.





தவமே புரிந்திலன் தண்மலர் இட்டு

முட்டாது இறைஞ்சேன்

அவமே பிறந்த அருவினையேன்

உனக்கு அன்பருள்ளாம்

சிவமே பெறுந்திரு எய்திற்றிலேன்

நின் திருவடிக்காம்

பவமே அருளு கண்டாய் 5

அடியேற்கு எம்பரம்பரனே





பரந்துபல் ஆய்மலர் இட்டு

முட் டாது அடி யே இறைஞ்சி

இரந்த எல்லாம் எமக்கே பெறலாம்

என்னும் அன்பருள்ளம்

கரந்து நில்லாக் கள்வனே நின்தன்

வார்கழற்கு அன்புஎனக்கும்

நிரந்தரமாய் அருளாய் நின்னை 6

ஏத்த முழுவதுமே.





முழுவதும் கண்டவனைப் படைத்தான்

முடிசாய்த்து முன்னாள் மா

செழுமலர் கொண்டு எங்கும்தேட

அப்பாலன்இப்பால் எம்பிரான்.

கழுதொடு காட்டிடை நாடகம்8

ஆடிக் கதிஇலியாய்

உழுவையின் தோல்உடுத்து உன்மத்தம் 7

மேல்கொண்டு உழிதருமே.





உழிதரு காலும் கனலும்
புனலொடு மண்ணும்விண்ணும்
இழிதரு காலம்எக் காலம்
வருவது வந்ததன்பின்
உழிதரு காலத்தஉன் அடியேன்
செய்த வல்வினையைக்
கழிதரு காலமு மாய்அவை காத்து 8
எம்மைக் காப்பவனே.





பவன் எம்பிரான்பனி மாமதிக்

கண்ணிவிண்ணோர் பெருமான்

சிவன் எம்பிரான்என்னை ஆண்டு

கொண்டான் என் சிறுமைகண்டும்

அவன் எம்பிரான் என்னநான்

அடியேன்என்ன இப்பரிசே

புவன் எம்பிரான்தெரியும் 9

பரிசாவது இயம்புகவே.





புகவே தகேன்உனக்கு அன்பருள்
யான்என் பொல்லாமணியே
தகவே எனைஉனக்கு ஆட்கொண்ட
தன்மைஎப் புன்மையரை
மிகவே உயர்த்தி விண்ணோரைப்
பணித்திஅண்ணா அமுதே
நகவே தகும் எம்பிரான் என்னை 10
நீசெய்த நாடகமே.



ஸ்ரீ மாணிக்கவாசகர்